குஜராத் மாநில அரசு மற்றும் பலர்

எதிர்

ஆர். ஜெ.பதான் மற்றும் பலர்

(உரிமையியல் மேல்முறையீடு எண். 1951/2022)

2022 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 24 ஆம் தேதி

[மாண்புமிகு நீதியரசர் திரு. எம். ஆர். ஷா

மற்றும்

மாண்புமிகு நீதியரசர் திருமதி. பி. வி. நாகரத்னா]

பணிச் சட்டம் – முறைப்படுத்துதல் – எதிர் மேல்முறையீட்டாளர்கள் ஒரு தற்காலிக செயல் திட்டத்தில் பணி அமர்த்தபட்டனர் – ஆரம்பத்தில் நிர்ணயிக்கப்பட்ட ஊதியத்துடன் பதினொரு மாதங்களுக்கு நியமிக்கப்பட்டு, அது அவ்வப்போது தொடரப்பட்டது – எனினும், மேற்படி பிரிவு மூடப்பட வேண்டியிருந்ததாலும் அது ஒரு தற்காலிக பிரிவு என்பதாலும் மாநில அரசு, எதிர் மேல்முறையீட்டாளர்களின் பணிகளை நிறுத்தி விடுவதற்கு பதிலாக இடமாற்றம் செய்வது பொருத்தம் என கருதி, அவர்களை இந்திய செஞ்சிலுவை சங்கத்தில் நியமித்தது – இந்நிலையில், எதிர் மேல்முறையீட்டாளர்கள் இந்திய செஞ்சிலுவை சங்கத்தில் தங்களை நியமித்ததை எதிர்த்து உயர் நீதிமன்றத்தை அணுகினர் – தனியமர் நீதியரசர் நீதிப்பேராணை

மனுவை தள்ளுபடி செய்தார் – எதிர் மேல்முறையீட்டாளர்கள் உரிமை பட்டய மேல்முறையீட்டை தாக்கல் செய்தனர் – நீதியர் ஆயம் 2011–ல் இடைக்கால பரிகாரம் வழங்கி அதுவரையிலும் இருந்த நிலையை தொடருமாறு உத்தரவிட்டதன்படி எதிர் மேல்முறையீட்டாளர்கள் அரசு பணியை தொடர்ந்தனர் – 2021 ஆம் ஆண்டு, மேற்படி உரிமை பட்டய மேல்முறையீடு மேலும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, எதிர் மேல்முறையீட்டாளர்கள், தாங்கள் 17 வருடங்களாக பணி செய்வதாகவும், அவர்களை உள்ஈர்த்துக் கொள்ளவும், அவர்களது பணிகளை முறைப்படுத்தவும் மாநில அரசுக்கு உத்தரவிடும்படி வாதிட்டனர் – அதனை ஏற்றுக் கொண்ட நீதியர் ஆயம், எதிர் மேல்முறையீட்டாளர்களை உள்ஈர்த்துக் கொள்ளவும் / முறைப்படுத்தவும் தேவையெனில், அதிகப்படியான பணியிடங்களை உருவாக்கவும் பரிசீலனை செய்யுமாறு அரசுக்கு உத்தரவிட்டது – மேல்முறையீடு முடிவுசெய்யப்பட்டது : இம்மாதிரியான உத்தரவை பிறப்பிக்கையில், உயர்நீதிமன்ற நீதியர் ஆயம் எதிர் மேல்முறையீட்டாளர்கள் இடைக்கால உத்தரவின்படியே பணியில் தொடர்ந்தனர் என்ற பொருண்மையை பரிசீலிக்கவில்லை – தவிரவும், எதிர் மேல்முறையீட்டாளர்கள், நிலநடுக்கத்தினைத் தொடர்ந்து மறுவாழ்வு நோக்கத்திற்காக மட்டுமே உருவாக்கப்பட்ட, அதுவும் ஒரு தற்காலிக பிரிவில், ஆரம்பத்தில் பதினொரு மாதங்களுக்கு, நிர்ணயிக்கப்பட்ட ஊதியத்தில் நியமிக்கப்பட்டார்கள் என்பதை நீதியர் ஆயம் கருத்தில் கொள்ளவில்லை – எதிர்

மேல்முறையீட்டாளர்கள், நியமிக்கப்பட்டு பணிபுரிந்துவரும் பணியிடங்கள் அரசின் முறையான பணியாளர் தொகுதி எதிலும் ஒப்புதல் அளிக்கப்பட்ட பணியிடங்கள் அல்ல – ஆகையால், நீதியர் ஆயம் அவர்களை அரசுப்பணியில் உள்ளீர்த்துக் கொள்ளவதற்கும், அவர்களது பணிகளை முறைப்படுத்தவதற்கும் இம்மாதிரியான உத்தரவை பிறப்பித்திருக்கக்கூடாது – எதிர் மேல்முறையீட்டாளர்ளின் பணிகளை ஈர்த்துக் கொள்ளுகையில் மற்றும்/அல்லது முறைப்படுத்துகையில் மிகையான பணியிடங்களை மாநில அரசு உருவாக்கலாம் என்று நீதியர் ஆயம் மேலும் கருத்துரைத்துள்ளது – மிகையான பணியிடங்களை உருவாக்கச் சொன்ன இம்மாதிரியான உத்தரவு முழுவதுமாக அதிகார வரம்பிற்கு அப்பாற்பட்டது – எதிர் மேல்முறையீட்டாளர்கள் வெகு காலம் அதாவது 17 வருடங்கள் தொடர்ந்து வேலை செய்தனர் என்பதனையே நீதியர்ஆயம் ஆலோசித்ததாக தெரிகிறது – எனினும், எதிர் மேல்முறையீட்டாளர்கள், 17 வருடங்களில், 10 வருடங்கள் உயர்நீதிமன்ற இடைக்கால உத்தரவின்படியே தொடர்ந்து பணி செய்தனர் என்பதை நீதியர் ஆயம் பரிசீலிக்கவில்லை – மேலும் உமாதேவி வழக்குன் தீர்முடிவை பரிசீலிகையில், இடைக்கால உத்தரவின்படி, பணியாளர்கள் தொடர்ந்து பணியாற்றிய காலம் விலக்கப்பட வேண்டும் – அந்த அம்சங்களை உயர் நீதிமன்றம் முழுவதுமாக தவற விட்டுள்ளது – எதிர் மேல்முறையீட்டாளர்களால் தாக்கல் செய்யப்பட்ட நீதிப்பேராணை மனுவை தள்ளுபடி செய்த உயர் நீதிமன்ற

கற்றறிந்த தனியமர் நீதியரசரால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு இதன்படி மீட்டளிக்கப்படுகிறது.

பணிச் சட்டம் – முறைப்படுத்துதல் – உமாதேவி வழக்கு – எப்போது பொருந்தும் – முடிவு செய்யப்பட்டது : உமாதேவி வழக்கின் நோக்கம் மற்றும் உட்கருத்து யாதெனில் (1) எதிர்கால முறைபடுத்தப்படாத அல்லது சட்ட விரோதமான நியமனங்களை தடுப்பது மற்றும் (2) கடந்த காலங்களில் முறைபடுத்தபடாமல் நியமனம் செய்யப்பட்டு நீண்ட காலமாக பணிபுரிந்து வருபவர்களுக்கு ஒரு பலன் அளிப்பது ஆகும் – உமாதேவி வழக்குத் தீர்ப்பு, முறையான பணியாளர் தொகுதியில் ஒப்புதல் அளிக்கப்பட்ட பணியிடத்தில் முறையற்ற பணி நியமனங்களுக்குப் பொருந்தும் – அதுவே, ஒரு திட்டத்திற்காக / நிகழ்ச்சிக்காக உருவாக்கப்பட்ட தற்காலிக நியமனங்களுக்குப் பொருந்தாது.

மேல்முறையீட்டை அனுமதித்த இந்நீதிமன்றம் தீர்மானித்ததாவது:

1. உயர் நீதிமன்ற நீதியர் ஆயம் பிறப்பித்த எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரை மற்றும் உத்தரவிலிருந்து எதிர் மேல்முறையீட்டாளர்கள் நீண்ட காலமாக தொடர்ந்து பணியில் இருந்துள்ளனர். அதாவது 17 வருடங்கள் என்பதை உயர் நீதிமன்றம் ஆலோசித்துள்ளதாக தெரிகிறது. எனினும், எதிர் மேல்முறையீட்டாளர்கள், 17 வருடங்களில், 10 வருடங்கள் உயர்நீதிமன்ற இடைக்கால

உத்தரவின்படியே தொடர்ந்து பணி செய்தனர் என்பதை நீதியர் ஆயம் பரிசீலிக்கவில்லை. ஆகையால், நீதிமன்றம் மேற்படி உமாதேவி வழக்குத் தீர்ப்பினை பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டாலும், இடைக்கால உத்தரவினை தொடர்ந்து பணி செய்த பணியாளர்களின் பணிக்காலம் விலக்கப்பட்டதே அன்றி கணக்கில் எடுத்துக் கொள்ளப்படவில்லை. மேற்சொன்ன அம்சங்களை உயர் நீதிமன்றம் முழுவதுமாக தவற விட்டுள்ளது. [பத்தி 7] [787–ஜி–ஹெச்; 788 -எ]

2. மேற்படி உமாதேவி வழக்குத்தீர்ப்பு முறையான பணியாளர் தொகுதியில் நியமிக்கப்பட்டு முறைப்படுத்தப்படாமல் ஒப்புதல் அளிக்கப்பட்ட பணியிடங்களுக்கு வேண்டுமானால் பொருந்தலாம். அதுவே ஒரு திட்டத்திற்காக/ நிகழ்ச்சிக்காக உருவாக்கப்பட்ட தற்காலிக நியமனங்களுக்கு பொருந்தாது. [பத்தி 8] [788 -சி- டி]

கர்நாடக மாநில அரசு –எதிர்– உமாதேவி (3), (2006) 4 எஸ் சி சி1 : [2006] 3 எஸ் சி ஆர் 953 – பொருந்தாது என தீர்மானிக்கப்பட்டது.

3. இருந்த போதிலும், தற்காலிக பிரிவில் தற்காலிக ஒப்பந்த அடிப்படையில், நிர்ணயிக்கப்பட்ட கால ஊதியத்துடன் நியமிக்கப்படுகின்ற பணியாளர்கள், தற்காலிக பிரிவை மூடுவதன் பேரில் அவர்களின் பணிகள் தேவைப்படுவதில்லை என

கண்டறியப்படுகிறவிடத்து எதிர் மேல்முறையீட்டாளர்களை மற்றொரு பணியாளர் தொகுதிக்கு பணி மாற்றம் செய்யும் கடமை அரசுக்கு இல்லை. எனினும், மாநில அரசு போதுமான கருணையுடன் இந்திய செஞ்சிலுவை சங்கத்தில் எதிர் மேல்முறையிட்டாளர்களை பணியமத்தியது. அதனை எதிர் மேல்முறையீட்டாளர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. [பத்தி 9][788 –எப்- ஜி]

4. உயர்நீதிமன்ற நீதியர் ஆயம் பிறப்பித்த எதிர்ப்புக்குள்ளான உத்தரவிலிருந்து தெரிவதுயாதெனில், உயர் நீதிமன்றம் மேற்கூறிய வழக்கின் விசித்திரமான பொருண்மைகளையும் சூழ்நிலைகளையும் கருத்தில் கொண்டு உள்ளீர்த்துக் கொள்ளவும், முறைப்படுத்தவும், தேவையெனில் மிகையான பணியிடங்களை உருவாக்கவும் உத்தரவிட்டதை மற்ற வழக்குகளின் முன்தீர்ப்பாக கருதக்கூடாது என்று உத்தரவிடப்பட்டது. மேலும், மேற்கூறியபடி கருதுவதற்கு விசித்திரமான பொருண்மைகளோ சூழ்நிலைகளோ உத்திரவாதமாக இல்லாததால் இம்மாதிரியான உத்தரவை உயர் நீதிமன்ற நீதியர் ஆயம் பிறப்பித்திருக்கக் கூடாது. மிகையான பணியிடங்களை உருவாக்குவதற்கு இதுபோன்ற ஒரு உள்ளீர்ப்பு மற்றும்/அல்லது முறைப்படுத்துதல் தேவைப்பட்டாலும் கூட, இந்திய அரசியலமைப்பின் வகுமுறைக்கூறு 226–ன் கீழ் அதிகாரங்களைப் பயன்படுத்தி உயர்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை

முன்தீர்ப்பாக கருத முடியாது. [பத்தி 10] [788 – ஜி–ஹெச்; 789 – எ – பி]

நரேந்திர குமார் திவாரி –எதிர்– ஜார்க்கண்ட் மாநில அரசு(2018) 8 எஸ்சிசி 238 : [2018] 9 எஸ்சிஆர் 412 – பொருந்தாது என தீர்மானிக்கப்பட்டது.

<u>பார்வையிடப்பட்ட தீர் முடிவுகள்</u>

[2006] 3 எஸ்சிஆர் 953 பொருந்தாது என தீர்மானிக்கப்பட்டது பத்தி 4.1

[2018] 9 எஸ்சிஆர் 412 பொருந்தாது என தீர்மானிக்கப்பட்டது பத்தி 4.1

உரிமையியல் மேல்முறையீட்டு அதிகார வரம்பு : உரிமையியல் மேல்முறையீடு எண் 1951/ 2022.

அஹமதாபாத்திலுள்ள குஜராத் உயர்நீதிமன்றத்தின் உரிமை பட்டய மேல்முறையீடு எண்.2082/2011–ல், சிறப்பு உரிமையியல் விண்ணப்ப எண்.17328/2011–ல், 18.2.2021 தேதியிட்ட தீர்ப்புரை மற்றும் உத்தரவிலிருந்து எழுகிறது.

செல்வி. தீபன் விட்டா பிரியங்கா, வழக்குரைஞர், மேல்முறையீட்டாளர்களுக்காக.

கபீர் ஹாதி, செல்வி. ஜேஸல் வாகி, வழக்குரைஞர்கள், எதிர் மேல்முறையீட்டாளர்களுக்காக

நீதிமன்றத்தின் தீர்ப்புரை மாண்புமிகு நீதியரசர் திரு. எம்.ஆர்.ஷா அவர்களால் வழங்கப்பட்டது.

1. அஹமதாபாத்திலுள்ள குஜராத் உயர்நீதிமன்றத்தின் உரிமை பட்டய மேல்முறையீடு (சுருக்கமாக 'உ.ப.மே') எண்.2082/2011–ல் நீதியர் ஆயத்தால் மேற்படி உ.ப.மே–ஐ அனுமதித்து, பணி முறைப்படுத்தும்படியான எதிர் மேல்முறையீட்டாளரின் வழக்கை பரிசீலித்து, தேவைப்படுமாயின் மிகையான பணியிடங்களை உருவாக்கும்படியும் மாநில அரசுக்கு உத்தரவிட்டு 18.02.2021 தேதியன்று பிறப்பிக்கப்பட்ட எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரை மற்றும் உத்தரவில் பாதிக்கப்பட்டு அதிருப்தியுற்ற மாநில அரசு தற்போதைய மேல்முறையீட்டை தாக்கல் செய்தது.

2. தற்போதைய மேல்முறையீட்டுக்கு வழிவகுக்கும் பொருண்மைகள் சுருக்கமாக கீழ்க்கண்டவாறு:

குஜராத் அரசு, "நிலநடுக்கத்திற்கு பின்பான– மறு மேம்பாட்டுத் திட்டம்" என்னும் பெயரில் குறிப்பிட்ட செயல் திட்டத்திற்காக, ஒப்பந்த அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட ஊதியத்துடன் பதினொரு மாதங்களுக்கு, இங்குள்ள எதிர் மேல்முறையீட்டாளர்களை பணி அமர்த்தியது. இங்குள்ள எதிர் மேல்முறையீட்டாளர்கள் ஆரம்பத்தில் பதினொரு மாத காலத்திற்கு

ஓட்டுனர் பணிக்கு 2004 ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்டனர். இங்குள்ள எதிர் மேல்முறையீட்டாளர்கள் நியமிக்கப்பட்ட செயல் திட்டம் முடிவதன்பேரில், அவர்களை பணியிலிருந்து நிறுத்துவதற்கு பதிலாக மாநில அரசு இந்திய செஞ்சிலுவை சங்கப் பணிகளில் அவர்களை பணியமர்த்த முடிவு எடுத்தது. இந்திய செஞ்சிலுவை சங்கப் பணிகளில் சேர்வதற்கு பதிலாக, அரசுப் பணியில் அவர்களை உள்ளீர்த்துக் கொள்வதற்காகவும் அவர்களது பணிகளை முறைப்படுத்துவதற்காகவும் எதிர் மேல்முறையிட்டார்கள், நீதிப்பேராணை மனு எண்.17328/2011–ஐ தாக்கல் செய்ததன் மூலம் உயர்நீதிமன்றத்தை அணுகினர். அசல் நீதிப்பேராணை மனுதாரர்களும் இந்திய செஞ்சிலுவை சங்கத்தில் அவர்களது நியமனங்களை எதிர்த்தனர்.

2.1. அசல் நீதிப்பேராணை மனுதாரர்கள் நிர்ணயிக்கப்பட்ட ஊதியத்துடன் பதினோரு மாதங்களுக்கு மட்டுமே நியமிக்கப்பட்டதாலும், அது அவ்வப்போது தொடரப்பட்டதாலும், அவர்கள் எந்த பிரிவில் தற்காலிகமாக நியமிக்கப்பட்டார்களோ அது ஒரு "திட்ட செயல்படுத்தல் பிரிவு" என்பதாலும், நிலநடுக்கத்தை தொடர்ந்து மறுவாழ்வு நோக்கத்திற்கான "நிலநடுக்கத்திற்கு பின்பான மறு மேம்பாட்டுதிட்டம்" என்பதாலும், அவர்கள் ஒப்புதல் அளிக்கப்பட்ட எந்த நிரந்தரமான அரசு பணியாளர் தொகுதியிலும் நியமிக்கப்படவில்லை என்பதாலும், நீதிப்பேராணை மனுதாரர்களுக்கு எவ்வுரிமையும் கிடையாது என்று கற்றறிந்த

தனியமர் நீதியரசர் 25.11.2011 தேதியிட்ட உத்தரவில், மேற்கூறிய நீதிப்பேராணை மனுவை தள்ளுபடி செய்து கருத்துரைத்துள்ளார்.

2.2. நீதிப்பேராணை மனுவை கற்றறிந்த தனியமர் நீதியரசர் தள்ளுபடி செய்து பிறப்பித்த உத்தரவில் மனக்குறையுற்று அதிருப்தி அடைந்த எதிர் மேல்முறையீட்டாளர்கள் – அசல் நீதிப் பேராணை மனுதாரர்கள், உயர்நீதிமன்ற நீதியர் ஆயத்தின் முன்பாக உ.ப.மே. எண்.2082/2011–ஐ தாக்கல் செய்தனர். 20.12.2011 தேதியிட்ட இடைக்கால உத்தரவு மூலம், எதிர் மேல்முறையீட்டாளர்கள் மாநில அரசுப் பணிகளை தொடர்ந்து செய்தனர் மற்றும் அவர்கள் இந்திய செஞ்சிலுவை சங்கத்திற்கும் இடமாற்றம் செய்யப்படவில்லை. மேற்கூறிய உ.ப.மே. நீதியர் ஆயத்தின் முன்பு 2021–ஆம் ஆண்டில் விசாரணைக்காக வந்தது. இங்குள்ள எதிர் மேல்முறையீட்டாளர்கள் – அசல் நீதிப்பேராணை மனுதாரர்கள் சார்பாக, தாங்கள் தொடர்ந்து அரசு பணியில் பணி செய்து வருவதாகவும், இந்திய செஞ்சிலுவை சங்கத்திற்கு மாற்றப்படவில்லை என்பதாலும், அவர்கள் தற்போது வரை 17 வருடங்கள் பணி செய்து வருவதாலும், நீண்ட காலம் பணியாற்றியுள்ளபடியால், அவர்களது பணியினை முறைப்படுத்த பரிசீலனை செய்யுமாறு மாநில அரசுக்கு உத்தரவிடும்படி நீதியர் ஆயத்தில் கோரினர்.

2.3. உயர் நீதிமன்றத்தின் நீதியர் ஆயம் அதன் எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரை மற்றும் உத்தரவு மூலம், இங்குள்ள

எதிர்மனுதாரர்களை உள்ளீர்த்துக் கொள்ளவும் கருணையுடன் முறைப்படுத்தவும், எதிர் மேல்முறையீட்டாளர்கள் – அசல் நீதிப்பேராணை மனுதாரர்கள் தற்போது வரை பதினேழு வருடங்கள் பணிபுரிந்துள்ளார்கள் என்பதன் அடிப்படையில், தேவையெனில் மிகையான பணியிடங்களை உருவாக்கும்படி மாநில அரசு/துறைக்கு உத்தரவிட்டது.

2.4. உயர் நீதிமன்ற நீதியர் ஈராய அமர்வால் பிறப்பிக்கப்பட்ட எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரை மற்றும் உத்தரவினால் மனக்குறைவுற்று அதிருப்தி அடைந்த மாநில அரசு தற்போதைய மேல்முறையீட்டை முன் கொணர்ந்துள்ளது.

3. மாநில அரசின் சார்பாக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர் செல்வி. தீபன்விட்டா பிரியங்கா, எதிர்மேல்முறையீட்டாளர்களை உள்ளீர்த்துக் கொள்வதற்காகவும்/ கருணையுடன் முறைப்படுத்துவதற்காகவும், தேவையான மிகைப் பணியிடங்களை உருவாக்கிக் கொள்ளவும், மாநில அரசுக்கு உத்தரவிட்டதில் உயர் நீதிமன்றத்தின் நீதியர் ஆயம் பெரும் பிழை செய்துள்ளதாக முனைப்புடன் வாதிட்டார்.

3.1. எதிர் மேல்முறையீட்டாளர்கள் ஆரம்பத்தில், நிர்ணயிக்கப்பட்ட பதினோரு மாத காலத்திற்கு ஓட்டுநர் பணியிடங்களுக்காக நிலநடுக்கத்தை தொடர்ந்து மறுவாழ்வு நோக்கத்திற்காக, "நிலநடுக்கத்திற்குப் பின்பான மறு மேம்பாட்டு திட்டம்" எனும் பெயர் கொண்ட தற்காலிக செயல் திட்டத்தில்

நியமிக்கப்பட்டனர் மற்றும் அவர்கள் எந்த ஒரு முறைப்படுத்தப்பட்ட பணியாளர் தொகுதியிலும் மற்றும்/அல்லது எந்த ஒரு பணியாளர் தொகுதியில் அங்கீகரிக்கப்பட்ட பணிகளிலும் நியமனம் செய்யப்படவில்லை என்ற பொருண்மைகளை உயர் நீதிமன்ற நீதியர் ஆயம் சரியாக கருத்தில் கொள்ளவில்லை என்று வாதிடப்பட்டது. ஆகையால் உள்ளீர்த்துக்கொள்ளவும்/முறைப்படுத்தவும் கோருவதற்கு அவர்களுக்கு உரிமை இல்லை என்று வாதிடப்பட்டது.

3.2. குஜராத் மாநில அரசின் சார்பாக கற்றறிந்த வழக்குரைஞர் முன்னிலையான போது, உயர் நீதிமன்றம் பிறப்பித்த இடைக்கால உத்தரவின்படியே 2011–க்கு பிறகு தொடர்ந்தனர் என்ற பொருண்மையை நீதிமன்ற ஆயம் கருதவில்லை மற்றும்/அல்லது பரிசீலிக்கவில்லை என்று வாதிட்டார். ஆகவே, உயர்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால உத்தரவிற்கு இணங்க எதிர் மேல்முறையீட்டார்கள் பணியில் தொடர்வதாலும், உயர் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால உத்தரவிற்கு இணங்க, அவர்களை துறையில் தொடர்ந்திருக்க வைத்ததாலும், அவர்கள் 17 வருடங்களுக்கு மேலாக (இடைக்கால உத்தரவின் கீழ்) பணியாற்றுவதாலும், பணியில் உள்ளீர்த்து மற்றும்/அல்லது பணியில் முறைப்படுத்தும்படியான வாதுரையை அவர்கள் முன்வைக்க முடியாது.

3.3. மேற்கூறப்பட்ட வாதங்களை முன்வைத்து இம்மேல்முறையீட்டினை அனுமதிக்க வேண்டுரைக்கப்பட்டது.

4. எதிர் மேல்முறையீட்டாளர்கள் – உயர்நீதிமன்றத்தின் அசல் நீதிப்பேராணை மனுதாரர்களின் சார்பாக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர் திரு. கபீர் ஹாத்தி அவர்களால், இம்மேல்முறையீடு, எதிர்த்து வாதிடப்பட்டது.

4.1. எதிர் மேல்முறையீட்டாளர்கள் சார்பாக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர், கர்நாடக மாநில அரசு –எதிர்– உமாதேவி (3) வெளியிடப்பட்டது (2006) 4 எஸ்சிசி என்ற வழக்கில், இந் நீதிமன்றத்தின் தீர்ப்பினையும், அதற்கடுத்து நரேந்திர குமார் திவாரி –எதிர்– ஜார்க்கண்ட் மாநில அரசு, வெளியிடப்பட்டது (2018) 8 எஸ்சிசி 238 (பத்தி 7) என்ற வழக்கில், இந்நீதிமன்றத்தின் தீர்ப்பினையும் சார்ந்து நின்றார். மேற்கூறிய தீர்ப்புகளை சார்ந்திருக்கையில், எதிர் மேல்முறையீட்டாளர்கள் 17 வருடங்களுக்கு மேலாக மாநில அரசில் ஓட்டுனராகப் பணிபுரிந்துள்ளதாகவும், அவர்களின் வழக்குகளை பரிசீலித்து உள்ளீர்த்துக்கொள்ளவும்/ கருணையுடன் முறைப்படுத்தவும், தேவையெனில் மிகையான பணியிடங்களை உருவாக்கவும் உயர்நீதிமன்ற நீதியர் ஆயம், மாநில அரசுக்கு சரியாக உத்தரவிட்டுள்ளது என்று வாதிடப்பட்டது.

4.2. எதிர் மேல்முறையீட்டாளர்கள் மாநில அரசில் 17 வருடங்களாக ஓட்டுனர்களாக பணியாற்றிக் கொண்டிருப்பதால்,

அவர்களை மாநில அரசு உள்ளீர்த்துக் கொண்டிருக்கலாம் மற்றும் அவர்களுடைய பணிகளை முறைப்படுத்தி இருக்கலாம் என்றும் வாதிடப்பட்டது.

5. கற்றறிந்த வழக்குரைஞர்கள் அவரவர் தரப்பினருக்காக முனைப்பாக வாதாடியதை நாங்கள் கேட்டோம்.

மேற்கூறியதில், எதிர் மேல்முறையீட்டாளர்கள் – அசல் நீதிப்பேராணை மனுதாரர்கள், நிலநடுக்கத்தைத் தொடர்ந்து, மறுவாழ்வு நோக்கத்திற்காக மட்டுமே உருவாக்கப்பட்ட "நிலநடுக்கத்திற்கு பின்பான மறு மேம்பாட்டு திட்டம்" எனும் தற்காலிக செயல் திட்டத்தில் நியமிக்கப்பட்டனர் என்பது கருத்தில் கொள்ளப்படவேண்டியதாகிறது. அவ்வப்போது தேவைக்கேற்ப தொடரப்பட்ட "திட்ட செயல்படுத்தல் பிரிவு" – எனும் ஒரு குறிப்பிட்ட திட்டம் /பிரிவில் அவர்கள் அனைவரும் ஆரம்பத்தில், நிர்ணயிக்கப்பட்ட ஊதியத்துடன் பதினோரு மாத காலத்திற்கு நியமிக்கப்பட்டனர். எனினும், மேற்படி பிரிவு மூடப்பட வேண்டியிருந்ததாலும், அது ஒரு தற்காலிக பிரிவு என்பதாலும் மாநில அரசு, எதிர் மேல்முறையீட்டாளர்களின் பணிகளை நிறுத்தி விடுவதற்கு பதிலாக இடமாற்றம் செய்வது பொருத்தம் என நினைத்து, அவர்களை இந்திய செஞ்சிலுவை சங்கத்தில் நியமித்தது. இந்நிலையில், எதிர் மேல்முறையீட்டாளர்கள் இந்திய செஞ்சிலுவை சங்கத்தில் தங்களை நியமித்ததை எதிர்த்து உயர்

நீதிமன்றத்தை அணுகினர். தனியமர் நீதியரசர் நீதிப்பேராணை மனுவை கீழ்க்கண்டவாறு கருத்துரைத்து தள்ளுபடி செய்தார்:

"1 மற்றும் 2–ஆம் எதிர் மேல்முறையீட்டாளர்களிடம் பணி ஒப்பந்த விதிமுறைகளின் படி, நிர்ணயிக்கப்பட்ட கால மற்றும் ஊதியத்தில், மனுதாரர்கள் பணி புரிகின்றனர் என்பதும், நிர்வாக தேவைகளை கருத்தில் கொண்டு 4–ஆம் எதிர்மேல்முறையீட்டாளரிடம் தற்போது இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர் என்பதும், இவ்வழக்கு பிரச்சனையல்ல. மனுதாரர்கள் நிர்ணயிக்கப்பட்ட ஊதியத்துடன் 11 மாதங்களுக்கு மட்டுமே நியமிக்கப்பட்டதாலும், அது அவ்வப்போது தொடரப்பட்டதாலும், மேலும், அவர்கள் எந்த பிரிவில் தற்காலிகமாக நியமிக்கப்பட்டார்களோ அது ஒரு "திட்ட செயல்படுத்தல் பிரிவு" என்பதாலும், நிலநடுக்கத்தை தொடர்ந்து மறுவாழ்வு நோக்கத்திற்கான "நில நடுக்கத்திற்குப் பின்பான மறு மேம்பாட்டு திட்டம்" என்ற தற்காலிக செயல் திட்டத்தில் நியமிக்கப்பட்டனர். நிரந்தரம் இல்லாத தற்காலிக பதவி காலம் கொண்ட இப்பிரிவில், மனுதாரர்கள் வரையறுக்கப்பட்ட காலத்திலும், ஊதியத்திலும் நியமிக்கப்பட்டார்கள். இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தில் ஊதியத்துடன் அவர்களது பணிகளை தொடர நியமித்தது அரசின் முடிவு என்றாலும், மனுதாரர்களில் ஒருவர் கூட அரசின் எந்த ஒரு பணியாளர் தொகுதியிலும், எந்த ஒரு நிரந்தர அங்கீகரிக்கப்பட்ட பணிகளிலும் நியமிக்கப்பட்ட

பணியாளர் கிடையாது என்பதாலும், எந்த ஒரு பணிக்கட்டுப்பாட்டின் கீழ் உள்ள விதிமுறைகளும் மீறப்படவில்லை என்பதாலும் மனுதாரர்களுக்கு எவ்வித உரிமையும் இல்லை. மனுதாரர்களை நியமித்தது எந்த ஒரு சட்டப்படியான விதிமீறலோ அல்லது தவறோ கிடையாது."

6. கற்றறிந்த தனியமர் நீதியரசர், 2011–ஆம் ஆண்டு பிறப்பித்த உத்தரவில் நீதிப்பேராணை மனுவை தள்ளுபடி செய்துள்ளார். உ.ப.மே–வின் மூலமாக எதிர் மேல்முறையீட்டாளர்கள் தனியமர் நீதியரசர் பிறப்பித்த உத்தரவை எதிர்த்தனர். 2011–ஆம் ஆண்டு நீதியர் ஆயம் இடைக்கால பரிகாரம் வழங்கி அதுவரை இருந்த நிலையை தொடருமாறு உத்தரவிட்டு மேற்படி இடைக்கால உத்தரவிற்கு இணங்க, எதிர் மேல்முறையீட்டாளர்கள் அரசு பணியில் தொடர்ந்தனர். 2021–ஆம் ஆண்டு, மேற்கூறிய உ.ப.மே–ஐ தொடர்ந்து விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, தற்போது வரை, எதிர்மேல்முறையீட்டாளர்கள் 17 வருடங்களாக பணியில் இருப்பதாகவும், மாநில அரசு அவர்களை உள்ளீர்த்துக்கொள்ளவும், அவர்களின் பணிகளை முறைப்படுத்தவும் மாநில அரசுக்கு உத்தரவிடலாம் என்று எதிர் மேல்முறையீட்டாளர்கள் சார்பாக வாதிடப்பட்டது. இதனை கருத்தில் எடுத்துக் கொண்ட உயர்நீதிமன்ற நீதியர் ஆயம் எதிர் மேல்முறையீட்டாளர்கள், நீண்ட காலமாக அதாவது 17 வருடங்களாக வேலை செய்து வருவதால், எதிர் மேல்முறையீட்டாளர்களை உள்ளீர்த்துக்

கொள்வதற்காகவும்/முறைப்படுத்துவதற்காகவும், தேவையெனில் மிகையான பணியிடங்களை உருவாக்கவும் எதிர் மேல்முறையீட்டாளர்களின் வழக்குகளை பரிசீலிக்க, மாநில அரசுக்கு உத்தரவிட்டது. எனினும், இம்மாதிரி உத்தரவிடும்போது எதிர் மேல்முறையீட்டாளர்கள் உயர் நீதிமன்ற இடைக்கால உத்தரவின்படியே பணியை தொடர்ந்துள்ளனர் என்பதை உயர் நீதிமன்றம் கருத்தில் கொள்ளவே இல்லை. "நிலநடுக்கத்திற்கு பின்பான மறு மேம்பாட்டு திட்டம்" எனும் திட்டத்தில் "திட்ட செயல்படுத்தல் பிரிவு" எனும் பிரிவில், நிலநடுக்கத்தை தொடர்ந்து, மறுவாழ்வு நோக்கத்திற்காக, ஆரம்பத்தில் வரையறுக்கப்பட்ட ஊதியத்துடன் 11 மாதங்களுக்கு எதிர் மேல்முறையீட்டாளர்கள் பணியமர்த்தப்பட்டனர் அதுவும் தற்காலிகப் பிரிவில் என்ற பொருண்மையை கருத்தில்கொள்ளவோ மற்றும்/அல்லது பரிசீலிக்கவோ இல்லை. ஆகையால், எதிர் மேல்முறையீட்டாளர்கள் எந்த பிரிவில் நியமிக்கப்பட்டார்களோ அது தற்காலிக பிரிவு மட்டுமேயன்றி முறையான பணியாளர் தொகுதி கிடையாது. எதிர் மேல்முறையீட்டாளர்கள் எந்த பிரிவில் நியமிக்கப்பட்டு பணி செய்தார்களோ, அது, அரசின், எந்த முறையான பணியாளர் தொகுதியிலும் அங்கீகரிக்கப்பட்ட பணிகள் கிடையாது. ஆகையால், எதிர் மேல்முறையீட்டாளர்கள் வரையறுக்கப்பட்ட்ட காலம் மற்றும் நிர்ணயிக்கப்பட்ட ஊதியத்திற்கு ஒரு குறிப்பிட்ட செயல் திட்டத்திற்காக உருவாக்கப்பட்ட தற்காலிக பிரிவில் நியமிக்கப்பட்டிருக்கும்போது அவர்களை மாநில அரசு உள்ளீர்த்துக்

கொள்ளவும், அவர்களது பணிகளை முறைப்படுத்தவும், இது போன்ற உத்தரவை உயர்நீதிமன்ற நீதியர் ஆயம் பிறப்பித்திருக்கக் கூடாது. மேலும் உயர் நீதிமன்றமானது, எதிர் மேல்முறையீட்டாளர்களை உள்ளீர்த்துக் கொள்ளும் போது மற்றும்/அல்லது அவர்களது பணிகளை முறைப்படுத்தும் போது மாநில அரசு மிகையான பணியிடங்களை உருவாக்கலாம் என்று கருத்துரைத்துள்ளது. மிகையான பணியிடங்களை உருவாக்கும்படி உத்தரவிட்டது நிலைக்கத்தக்கது அல்ல. இம்மாதிரியான உத்தரவு முழுவதுமாக அதிகார வரம்பற்றது. ஒரு குறிப்பிட்ட செயல் திட்டத்திற்காக உருவாக்கப்பட்ட ஒரு தற்காலிக பிரிவில் நியமிக்கப்பட்ட பணியாளர்களை, மிகையான பணியிடங்களை உருவாக்குவதன் முலம் உள்ளீர்த்துக் கொள்வதற்காகவும்/முறைப்படுத்துவதற்காகவும் உயர் நீதிமன்றம் இம்மாதிரியான உத்தரவை பிறப்பித்திருக்கத் தேவையில்லை.

7. உயர் நீதிமன்ற நீதியர் ஆயம் பிறப்பித்த எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரை மற்றும் உத்தரவிலிருந்து எதிர் மேல்முறையீட்டாளர்கள் நீண்ட காலமாக தொடர்ந்து பணியில் இருந்துள்ளனர். அதாவது 17 வருடங்கள் என்பதை உயர் நீதிமன்றம் ஆலோசித்துள்ளதாக தெரிகிறது. எனினும், எதிர் மேல்முறையீட்டாளர்கள், 17 வருடங்களில், 10 வருடங்கள் உயர்நீதிமன்ற இடைக்கால உத்தரவின்படியே தொடர்ந்து பணி செய்தனர் என்பதை நீதியர் ஆயம் பரிசீலிக்கவில்லை. ஆகையால், நீதிமன்றம் மேற்படி உமாதேவி வழக்குத் தீர்ப்பினை பரிசீலனைக்கு எடுத்துக்

கொண்டாலும், இடைக்கால உத்தரவினை தொடர்ந்து பணி செய்த பணியாளர்களின் பணிக்காலம் விலக்கப்பட்டதே அன்றி கணக்கில் எடுத்துக் கொள்ளப்படவில்லை. மேற்சொன்ன அம்சங்களை உயர் நீதிமன்றம் முழுவதுமாக தவற விட்டுள்ளது.

8. தற்போது, இதுவரை மேற்கோளுக்காக வைக்கப்பட்ட இந்நீதிமன்றத்தின் மேற்படி உமாதேவி வழக்குத் தீர்ப்பினையும், அதற்கடுத்து, இந்நீதிமன்றத்தின் மேற்படி நரேந்திர குமார் திவாரி வழக்கு தீர்ப்பினையும், எதிர் மேல்முறையீட்டாளர்களின் சார்பாக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர் சான்றுரைத்ததை எடுத்துக் கொண்டாலும், மேற்கூறிய தீர்ப்புகள் எதுவும் தற்போதைய வழக்கின் பொருண்மைகளோடு பொருந்தவில்லை. மேற்படி உமாதேவி வழக்குத் தீர்ப்பின் நோக்கம் மற்றும் உட்கருத்தான (1) எதிர்காலத்தில் முறைப்படுத்தப்படாத அல்லது சட்ட விரோதமான நியமனங்களை தடுப்பதற்கு மற்றும் (2) கடந்த காலங்களில் முறைப்படுத்தப்படாமல் நியமனம் செய்யப்பட்டு நீண்ட காலமாக பணிபுரிந்து வருபவர்களுக்கு ஒரு பலன் அளிப்பது ஆகும். மேற்படி உமாதேவி வழக்குத்தீர்ப்பு முறையான பணியாளர் தொகுதியில் நியமிக்கப்பட்டு முறைப்படுத்தப்படாமல் ஒப்புதல் அளிக்கப்பட்ட பணியிடங்களுக்கு வேண்டுமானால் பொருந்தலாம். அதுவே ஒரு திட்டத்திற்காக/ நிகழ்ச்சிக்காக உருவாக்கப்பட்ட தற்காலிக நியமனங்களுக்கு பொருந்தாது.

8.1. மேலும், மேற்படி நரேந்திர குமார் திவாரி என்ற வழக்கிலும் கூட, இது ஒரு முறையற்று நியமிக்கப்பட்ட பணியாளர்களின் வழக்கு ஆகும். இருந்த போதிலும், மேற்கூறிய நரேந்திரகுமார் திவாரி (மேற்படி) என்ற வழக்கின் பொருண்மைகள் மற்றும் சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு பார்க்கையில், தற்போதைய வழக்கின் பொருண்மைகளுக்கு மேற்சொன்ன தீர்ப்புரை பொருந்தாது. இந்நீதிமன்றத்தின் முன்புள்ள வழக்கானது, 15.11.2000 அன்று உருவாக்கப்பட்ட ஜார்கண்ட் மாநிலத்தில் பணியாற்றும் பணியாளர்களை குறித்தது, ஆகையால், முறையற்று நியமனம் செய்யப்பட்ட பணியாளர்களில் ஒருவர் கூட பத்து வருட பணி தொடர்ச்சியை மாநில அரசின் இறுதித் தேதியான 10. 04 .2006 அன்று முடிக்கவில்லை என்றும், அது இந்த இறுதி தேதி ஜார்க்கண்ட் மாநில அரசின் தொடர்புடைய விதிமுறைகளின் கீழ் நிர்ணயிக்கப்பட்டது என்று வாதுரைக்கப்பட்டது.

9. மாறாக, தேவையற்றதாக இருந்தாலும் மாநில அரசு எதிர்மேல்முறையீட்டாளர்களின் பணியை முடிவுக்கு கொண்டுவருவதற்கு பதிலாக, அவர்களை இந்திய செஞ்சிலுவை சங்கத்தில் கருணையுடன் நியமித்தது என்பது குறிப்பிடத்தக்கது. இருந்த போதிலும், தற்காலிக பிரிவில் தற்காலிக ஒப்பந்த அடிப்படையில், நிர்ணயிக்கப்பட்ட கால ஊதியத்துடன் நியமிக்கப்படுகின்ற பணியாளர்கள், தற்காலிக பிரிவை மூடுவதன் பேரில் அவர்களின் பணிகள் தேவைப்படுவதில்லை என கண்டறியப்படுகிறவிடத்து எதிர் மேல்முறையீட்டாளர்களை

மற்றொரு பணியாளர் தொகுதிக்கு பணி மாற்றம் செய்யும் கடமை அரசுக்கு இல்லை. எனினும், மாநில அரசு போதுமான கருணையுடன் இந்திய செஞ்சிலுவை சங்கத்தில் எதிர் மேல்முறையிட்டாளர்களை பணியமத்தியது. அதனை எதிர் மேல்முறையீட்டாளர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை.

10. உயர்நீதிமன்ற நீதியர் ஆயம் பிறப்பித்த எதிர்ப்புக்குள்ளான உத்தரவிலிருந்து தெரிவதுயாதெனில், உயர் நீதிமன்றம் மேற்கூறிய வழக்கின் விசித்திரமான பொருண்மைகளையும் சூழ்நிலைகளையும் கருத்தில் கொண்டு உள்ளீர்த்துக் கொள்ளவும், முறைப்படுத்தவும், தேவையெனில் மிகையான பணியிடங்களை உருவாக்கவும் உத்தரவிட்டதை மற்ற வழக்குகளின் முன்தீர்ப்பாக கருதக்கூடாது என்று உத்தரவிடப்பட்டது. மேலும், மேற்கூறியபடி கருதுவதற்கு விசித்திரமான பொருண்மைகளோ சூழ்நிலைகளோ உத்திரவாதமாக இல்லாததால் இம்மாதிரியான உத்தரவை உயர் நீதிமன்ற நீதியர் ஆயம் பிறப்பித்திருக்கக் கூடாது. மிகையான பணியிடங்களை உருவாக்குவதற்கு இதுபோன்ற ஒரு உள்ளீர்ப்பு மற்றும்/அல்லது முறைப்படுத்துதல் தேவைப்பட்டாலும் கூட, இந்திய அரசியலமைப்பின் வகுமுறைக்கூறு 226–ன் கீழ் அதிகாரங்களைப் பயன்படுத்தி உயர்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை முன்தீர்ப்பாக கருத முடியாது.

11. மேற்படி விவாதத்தை கருத்தில் கொண்டும், மேற்சொன்ன காரணங்களுக்காகவும் உயர் நீதிமன்ற நீதியர்

ஆயத்தால் பிறப்பிக்கப்பட்ட எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரை மற்றும் உத்தரவு நிலைக்கத்தக்கதல்ல மற்றும் அது, செல்லாதாதாக்கப்பட்டு நீக்கறவு செய்வதற்குரியது என்பதால் அதற்கிணங்க செல்லாதாதாக்கப்பட்டு நீக்கறவு செய்யப்படுகிறது. இங்குள்ள எதிர் மேல்முறையீட்டாளர்களால் தாக்கல் செய்யப்பட்ட நீதிப்பேராணை மனு எண்.17328/2011–இல் உயர்நீதிமன்ற கற்றறிந்த தனியமர் நீதியரசர் அந்நீதிப்பேராணை மனுவை தள்ளுபடி செய்து 25.11.2011 அன்று பிறப்பித்த உத்தரவு இதன் மூலம் மீட்டளிக்கப்படுகிறது.

12. அதன்படி தற்போதைய மேல்முறையீடு அனுமதிக்கப்படுகிறது. எனினும், செலவுத்தொகை குறித்து உத்தரவு ஏதுமில்லை.

மேல் முறையீடு அனுமதிக்கப்பட்டது.

<u>பொறுப்புத்துறப்பு</u>

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்து கொள்வதற்கும் பயன்படுத்திக் கொள்வதற்கும் உட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக் கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல் முறையான நோக்கங்களுக்கும் மற்ற தீர்ப்புரையை நிறைவேற்றறலுக்கும் செயற்படுத்துதலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்".